# Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX: 94-11-269-8629
E-mail: cultujpn@co.mofa.go.jp /www.lk.emb-japan.go.jp

**PRESS RELEASE**

ஊடக வெளியீடு நவம்பர 8, 2011

**இரத்தினபுரி மாவட்ட கிராமிய அபிவிருத்திக்கு ஜப்பான் உதவி வழங்குகிறது.**

இரத்தினபுரி மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜப்பானிய அரசாங்கம் 85104 US டொலர்களை (அண்ணளவாக 9.4 மில்லியன் ரூபாவை) நன்கொடையாக அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தின் கீழ் வழங்கவுள்ளது. இச்செயற்திட்டத்தின் மூலம் பலாங்கொடை மற்றும் பெல்மதுளை பிரதேச செயலக பிரிவுகளிற்குட்பட்ட சமூகங்களின் சுற்றுச்சூழலும் வாழ்வாதாரங்களும் முன்னேற்றமடையும்.

''இரத்தினபுரி மாவட்ட வறிய சமூகங்களுக்கான நீர் வழங்கல் வசதிககள் மற்றும் நுழைவுப் பாதை விருத்தி செய்யும் திட்டத்தின்'' கீழ் நான்கு நீர வழங்கல் திட்டங்களும் ஏழு விவசாயக் கிணறுகளும நிர்மானித்துக் கொடுக்கப்படுவதுடன் ஒரு நுழைவுப் பாதையும் புனரமைக்கப்படும். இச்செயற்திட்டமானது சபரகமுவ சமூக அபிவிருத்தி நிதியத்தால் அமுல்படுத்தப்படுவதடன் 400 குடும்பங்கள் நேரடியாக பயனடைவர்.

சபரகமுவ சமூக அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் திரு. கருணாரத்ன அவர்கள் தாம் இச்செயற்திட்டத்திற்கு நிதி உவுதவிகளை வழங்குவதையிட்டு ஜப்பானிய அரசாங்கத்திற்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம் என்பதடன் இச்செயற் திட்டம் சிங்கள, தமிழ், முஸ்லிம் போன்ற சகல இன மத மக்கள் பிரிவினரும் பயன் பெறும் வகையில் அமல்படுத்தப்படும் என்றார். இச்செயற்திட்டங்கள் பெல்மதுளை தோட்டம், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம் மற்றும் JICA நிறுவனத்தில் தொண்டராக இணைந்துள்ள செல்வி. மினாகோ ஹயாசி ஆகிய பல்வேறு தரப்பினரின் கூட்டுறவின் மூலம் செயற்படுத்தப்படும்.

ஒரு சக்தி வாய்ந்த அபிவிருத்தி பங்காளி எனற வகையில் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு ஜப்பான் ஆனது இலங்கை அரசாங்கம் மற்றம் மக்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றது.

இந்நன்கொடை தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் சபரகமுவ சமூக அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் திரு. பாலித கருணாரத்ன ஆகியோருக்கிடையே ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் நவம்பர் 8, 2011 அன்று கைச்சாத்திடப்பட்டது.

Please contact the Economic Cooperation Section of the Embassy for further information, Tel: 011-269-3831 (Ext.225)

******************************************************************************